வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 04.04.2026 சனிக்கிழமை | இதழ் : 88 | பக்கங்கள் : 08

## மத்திய கிழக்கு மோதல் நீடித்தால் இலங்கைக்கு பொருளாதார சிக்கல்

### சிங்கப்பூர் பல்கலைக்கழகம் ஆய்வறிக்கை

கொழும்பு, ஏப். 04

**மத்திய கிழக்கு மோதல்கள் தொடர்ந்து நீடித்தால், இலங்கையின் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை சிதைப்பதுடன், நாட்டை உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் உயர் வாழ்க்கைச் செலவு நெருக்கடிக்குள் தள்ளும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுகள் நிலைய ஆய்வாளர் ரஜினி கமகே வெளியிட்டிருக்கும் ஆய்வறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மத்திய கிழக்கு, போரின் விளைவாக ஹோர்முஸ் நீரிணையை மையப்படுத்தியிருந்த உலகளாவிய எரிபொருள் விநியோகச் சங்கிலி மற்றும் கப்பல் போக்குவரத்துப்பாதை என்பவற்றில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், இலங்கைக்கு, இறக்குமதி செய்யப்படும் எரிபொருள், உரம் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களில் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை பதற்றங்களுக்கு மத்தியில், உணவுப்பொருட்களில் விலையேற்றத்தினால் வெகுவாகப் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை நாட்டின் பேரண்டப்பொருளாதார ஸ்திரத்தன்மையை சிதைக்கும் அபாயத்தைக் கொண்டிருப்பதுடன், நாட்டை உணவுப்பாதுகாப்பின்மை மற்றும் உயர் வாழ்க்கைச்செலவு நெருக்கடிக்குள் தள்ளக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன், மத்திய கிழக்கு, போர் தொடரும் பட்சத்தில்

07

## நாட்டில் பல பாடசாலைகளில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை!

### இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 04

தற்போது சில பாடசாலைகளில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. குறிப்பாக, கொட்டாவ தர்மபால வித்தியாலயத்தில் 4,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். இவ்வளவு மாணவர்கள் இருக்கும் அந்தப் பாடசாலையில், கடந்த மூன்று நாட்களாகத் தண்ணீர் இல்லையென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்

07

## மக்கள் தேவைகளை நிறைவேற்ற இந்த அரசுக்கு திராணி இல்லை!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 04

நாட்டுக்கும் மக்களுக்கும் வழங்கிய பொய் வாக்குறுதிகள் மற்றும் ஏமாற்று வித்தைகள் காரணமாக, இன்று அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களால் மக்கள்

07

## புலிகளுக்கே அஞ்சாத புலனாய்வாளர்கள் ஆட்சியாளர்களுக்குப் பணியமாட்டார்கள்

### நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 04

"யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கே அஞ்சாத இலங்கைப் புலனாய்வாளர்கள், தற்போதைய ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டார்கள்" என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும்

07

## மத்திய கிழக்கு போர்ச் சூழ்நிலையால் உணவுப் பொருட்களின் விலை உயரும்

### ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

நியூயோர்க், ஏப். 04

ஈரான் மற்றும் யுக்ரைன் போர்ச் சூழல்களினால் உலகளாவிய உணவு விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாக, மார்ச் மாதத்தில் உலக உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையை மேற்கொள்காட்டி அல்ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உணவு விலைச் சுட்டெண், கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் மார்ச் மாதத்தில் 2.4 சதவீதம் அதிகரித்து

07

## அடுத்த வாரம் இலங்கை வருகிறது அரிசிக் கப்பல்!

கொழும்பு, ஏப். 04

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அரிசியை ஏற்றிய முதலாவது கப்பல் அடுத்த வாரம் நாட்டை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப்பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கணேஷ் விநாயகசுந்தரம் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

நாட்டின் உள்நாட்டு சந்தையில் நிலவும்

07

## டீசல் விலை 600 ரூபாவாகும்?

கொழும்பு, ஏப். 04

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் இன்னும் ஒரிரு வாரங்களுக்குள் முடிவுக்கு வராவிட்டால், இலங்கைப் பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அட்வொகாட்டா நிறுவனத்தின் தலைவர் முர்டசா ஜெபர்ஜி இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கையில் டீசல் விலை 600 ரூபாய் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

07

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று மீண்டும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஏப். 04

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று 24 மணி நேர அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளது.

நேற்று இடம்பெற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு கூட்டத்தின் போது இது தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. நியாயமற்ற இடமாற்றம் நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

## கடும் வெப்பம் உங்கள் மனநலத்தை பாதிக்கும்!

கொழும்பு, ஏப். 04

கடும் வெப்பம் காரணமாக மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் நிம்மதியற்ற நிலை போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும் என மனநல மருத்துவர் விந்தியா விஜய பண்டார எச்சரித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிக வெப்பத்தினால் ஏற்படும் நீரிழப்பு, உடலில் உள்ள இரசாயன மற்றும் ஹோர்மோன்

07

## அமெரிக்க தூதரகம் முன் அமைதி வழி போராட்டம்

கொழும்பு, ஏப். 04

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நினைவு கூரும் புனித வெள்ளியான நேற்று, அப்பாவி மற்றும் ஆதரவற்ற மக்களைப் படுகொலை செய்வதற்காகப் போர் தொடுக்கும் அமெரிக்க - இஸ்ரேலிய அரசாங்கங்களுக்குத் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக, கிறிஸ்தவக் குழு உட்பட பல செயற்பாட்டாளர்களால் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக ஓர் அமைதியான போராட்டமும் பிரார்த்தனை நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

07

## முதலீட்டாளர் போர்வையில் வெளியார்கள் உள்நுழைவு!

### வடக்கின் கடலுக்கு ஆபத்து என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஏப். 04

கடலட்டை பண்ணைகள் விஸ்தரிக்கப்படுகின்றபோது, அவற்றின் உரிமையாளர்களாகவும் பயனாளர்களாகவும் அந்தப் பிரதேசத்தினை சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் சிறீகாந் பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து

07

உண்மைகள் புனி[illegible]க்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பாடசாலைகளில் மாணவர் ஒழுக்கத்தை உறுதிப்படுத்த விசேட வழிகாட்டல்கள்!

கொழும்பு, ஏப். 04

பாடசாலை மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் தொடர்பாகக் கல்வி அமைச்சு புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துவதற்காகக் கல்வி அமைச்சினால் இந்த விசேட வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாகாணக் கல்விச் செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு இந்த அறிவுறுத்தல்கள் உத்தியோகபூர்வமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஒழுக்கக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கைக்கு மேலதிகமாக இந்தப் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

குறிப்பாக, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றை மேற்கோள் காட்டி இந்த வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு சூழ்நிலையிலும், தண்டனை என்ற பெயரிலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ மாணவர்கள் உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ பாதிக்கப்படக்கூடாது என்பது இதில் பலமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது இனி முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களை மீறிச் செயற்படும் எவரேனும் இருப்பின், அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது.

மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளின் போது, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு விதிகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# அரசு செலவினங்களை நிர்வகிக்க சுற்றறிக்கை!

கொழும்பு, ஏப். 04

அத்தியாவசிய பொதுச் சேவைகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும், தற்போதைய அரச நிதி மற்றும் அனுமதிக்கப்பட்ட அரச செலவு எல்லைகளுக்குள் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் மோதலால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கத்தைக் குறைக்கும் அதேவேளையில், அத்தியாவசிய பொதுச் சேவைகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதை நோக்காக் கொண்டே இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவினால் இந்தச் சுற்றறிக்கை அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், விசேட செலவின அலகுகள் மற்றும் ஆணைக்குழுக்களின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் வழங்குவதில் உள்ள கட்டுப்பாடுகள் மற்றும் புதன்கிழமை அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, எரிபொருள் ஒதுக்கீடுகளைத் தரப்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக அந்தச் சுற்றறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அதன்படி, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பிற பிரிவினருக்கு உரிமையுள்ள எரிபொருள் கொடுப்பனவுகள் மறு அறிவிப்பு வரும் வரை, மார்ச் 1 ஆம் திகதி நிலவரப்படியான எரிபொருள் விலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

மேலும், எரிபொருள் கொடுப்பனவுக்குப் பதிலாக எரிபொருள் அளவு மற்றும் அதன் விலையை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளையும் கடந்த மார்ச் 01 ஆம் திகதி நிலவிய எரிபொருள் விலைக்கு அமையவே கணக்கிட வேண்டும் என நிதி அமைச்சின் செயலாளர் குறித்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# "கம்மன்பிலவின் நூலிலுள்ள சகல உள்ளடக்கங்களோடு எம்மால் இணங்க முடியாது"

கொழும்பு, ஏப். 04

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவின் நூல் வெளியீட்டு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோர் கலந்துகொண்டது வெறும் அழைப்பின் பேரில் தானே தவிர, அந்த நூலின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொண்டு அல்ல. அதன் உள்ளடக்கங்கள் அனைத்தையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் கூறிய விடயங்கள் அனைத்துக்கும் முரணாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தமது ஆட்சியில் ஒரு அரிசி கூட இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்று உறுதியளித்தவர்கள், இன்று பல மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றனர். இதனால், விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வருமானம் தேசிய உற்பத்தி வருமானத்தில் பலமடங்காக வீழ்ச்சியடைந்துள்ளது.

தேசிய உற்பத்தி வருமானத்தில் விவசாயிகளின் பங்களிப்பு வெறும் 7 சதவீதம் மாத்திரமேயாகும். விவசாயிகள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கத்திடம் எந்தத் துறை தொடர்பிலும் முறையான திட்டமிடல் இன்மையால் மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் விலை அதிகரிப்பு மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது- என்றார். (எ)

# சித்திரை புத்தாண்டுக்காக நாடு முழுவதும் பாதுகாப்பு

**10 ஆயிரம் பொலிஸார் களத்தில்**

கொழும்பு, ஏப். 04

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், நாடு தழுவிய ரீதியில் விசேட பாதுகாப்புத் திட்டமொன்றைப் பொலிஸ் தலைமையகம் அமுல்படுத்தியுள்ளது.

இந்த விசேட பாதுகாப்பு நடவடிக்கையானது நாட்டிலுள்ள அனைத்து 608 பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் விரிவான முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார். (அ)

## குமார ஜயகொடிக்கு எதிராக பிரேரணை;

# தேசிய மக்கள் சக்தி இதுவரை இறுதி முடிவை எடுக்கவில்லை

கொழும்பு, ஏப். 04

ஏரிசக்திதுறை அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆளும் தேசிய மக்கள் சக்தி இதுவரை இறுதி முடிவை எடுக்கவில்லை என அக்கட்சியின் பொதுச்செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

எரிசக்தி துறை அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்களால் அண்மையில் பாராளுமன்ற சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்பட்டது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை உரிய முறையில் கொள்வனவு செய்யத் தவறியதன் மூலம், அமைச்சர் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்து பாரிய அலட்சியத்துடன் செயற்பட்டுள்ளதாக அந்தப் பிரேரணையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு முகாமையாளராக பணியாற்றிய காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும் எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நிஹால் அபேசிங்க, இதில் ஒழுக்கநெறி சார்ந்த சிக்கல் இருப்பதை கட்சி ஏற்றுக்கொள்வதாகவும், இது குறித்து மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பிரேரணைக்கு ஆதரவளிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது குறித்து இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கடற்றொழில் அமைச்சர், வடக்கு ஆளுநர் அட்டை பண்ணையாளர்களுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடலட்டைப் பண்ணையாளர்களுக்கும், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், கடலட்டைப் பண்ணைகளுக்காக அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள குத்தகைக் கட்டணத்தைச் செலுத்துவதில் தாங்கள் எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் பண்ணையாளர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்தக் குத்தகைக் கட்டணத்தைக் கணிப்பிட்டபோது, கடலட்டையின் சர்வதேச சந்தை விலை வீழ்ச்சி கருத்தில் கொள்ளப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர்கள், தற்போதைய சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டு பொதுவான சூத்திரமொன்றின் ஊடாகக் கட்டணத்தை மீளக் கணிப்பிடுமாறும், அதிகரிக்கப்பட்டுள்ள குத்தகைக் கட்டணத்தைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மற்றும் கௌரவ ஆளுநர் ஆகியோர், தற்போதைய கட்டணங்கள் கணிப்பிடப்பட்ட உத்தியோகபூர்வ முறைமை தொடர்பில் பண்ணையாளர்களுக்குத் தெளிவுபடுத்தினர். அத்துடன், கடலட்டைப் பண்ணையாளர்களின் இந்தக் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, மதிப்பீட்டு நடைமுறையை மீண்டும் பரிசீலனை செய்வது தொடர்பில் உரிய துறைசார் அதிகாரிகளுடன் விரைவில் கலந்துரையாடி ஆவன செய்வதாகப் பதிலளித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன் மற்றும் யாழ். மாவட்டக் கடலட்டைப் பண்ணையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ- 05)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
04.04.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## எதிரணி அரசியல் கட்சிகளும் மத்திய கிழக்கு போரும்

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்திருக்கும் போரின் விளைவாக இலங்கை எதிரநோக்கும் நெருக்கடிகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒழுங்காக கையாளவில்லை என்று எதிரணி கட்சிகள் இடையறாது குற்றஞ்சாட்டிய வண்ணமே இருக்கின்றன.

மார்ச் முற்பகுதியில் இலங்கை கடற்பரப்புக்கு அப்பால் ஈரானியப் போர்க் கப்பலை அமெரி க்க நீர்மூழ்கி மூழ்கடித்ததை தொடர்ந்து அரசாங்கம் செயற்பட்ட முறை பரவலாக மெச்சப்படுகின்ற அதேவேளை, எதிரணி அரசியல் வாதிகள் குறிப்பாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் போன்றவர்கள் நூறுக்கும் அதிகமான ஈரானியர்கள் பலியான அந்த பாரதூரமான சம்பவம் தொடர்பில் அமெரிக்காவிடம் அரசாங்கம் கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

மத்திய கிழக்கு போரின் விளைவாக உலக நாடுகள் பாரதூரமான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. சகல நாடுகளிலுமே விலைவாசி கடுமையாக அதிகரித்திருக்கும் நிலையில், ஏதோ இலங்கைக்கு மாத்திரம் தான் அத்தகைய நெருக்கடி அதுவும் அரசாங்கம் கடைப்பிடித்த அணுகுமுறைகள் காரணமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது என்பது போன்று எதிரணி கட்சிகள் விமர்சனங்களைச் செய்து கொண்டிருக்கின்றன.

ஒன்றிணைந்த எதிர்க் கட்சிகள் என்ற பெயரில் கொழும்பில் அடிக்கடி செய்தியாளர்கள் மகாநாடுகளும் ஏற்பாடு செய்யப்படுகிறது. நேற்று முன்தினம் அத்தகைய செய்தியாளர்கள் சந்திப்பொன்றில் உரையாற்றிய முன்னாள் அமைச்சரும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவருமான சம்பிக்க ரணவக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பகைத்துக்கொள்ளக் கூடியதாக எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்காது என்றும் அதனால் ரஷ்யாவிடமிருந்து எண்ணெயைக் கொள்வனவு செய்யாது என்றும் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் நெருக்கடியை தணிப்பதற்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் உதவியை நாடியிருக்கும் அரசாங்கம் ரஷ்யாவுடனும் இவ்வாரம் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருக்கிறது. எண்ணெயை வழங்குவதற்கு ரஷ்யா முன்வந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால், ரணவக்க போன்ற எதிரணி அரசியல்வாதிகள் ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு எண்ணெய் கிடைக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் கருத்துக்களை வெளியிடுவது போன்று தெரிகிறது.

பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திவந்த அரசியல் கட்சிகள் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்துக்கு வந்ததை சீரணித்துக் கொள்ள முடியாதவையாக இருக்கின்றன. அவை ஒன்றிணைந்தும் கூட அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு உருப்படியான இயக்கத்தை முன்னெடுக்க முடியாத அளவுக்கு பலவீனப்பட்டிருக்கின்றன.

அதனால், அவை அரசாங்கத்தின் சகல அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் விமர்சனம் செய்வதிலேயே குறியாக இருக்கின்றன. மத்திய கிழக்குப் போரின் விளைவாக இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் உண்மையில் ஒரு தேசிய நெருக்கடியாகும் . அதை கட்சி அரசியல் மாச்சரியங்களின் அடிப்படையில் நோக்கக் கூடாது. ஆனால், அத்தகைய அரசியல் விவேகத்தையும் முதிர்ச்சியையும் இலங்கையின் பெரும்பாலான அரசியல் கட்சிகளிடம் எதிர்பார்க்க முடியாது.

டொனால்ட் ட்ரம்பை பகைத்துக் கொள்ளக் கூடிய தீர்மானம் எதையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எடுக்காது என்று கூறும் சம்பிக்க ரணவக்க பெரும்பாலான உலக நாடுகள் குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் ட்ரம்ப் நிருவாகத்துடன் விவகாரங்களை எவ்வாறு கையாளுகின்றன என்பதை அறியாதவர் போன்று நடந்து கொள்ளக்கூடாது.

# சுண்டிக்குளம் பகுதியில் யானைகள் அட்டகாசம்!

### தென்னை மரங்கள் நாசம்



யாழ்ப்பாணம், ஏப். 04

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்தில் யானைகள் அதிகளவான தென்னை மரங்களை நாசம் செய்தன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

கடந்த மாதம் வடமராட்சி கிழக்கு காட்டு பகுதிக்கு வருகை தந்த பல யானைகள் கேவில், கட்டைக்காடு, நித்தியவெட்டை பகுதியில் காணப்பட்ட நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை நாசம் செய்தன

அதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை சுண்டிக்குளம் பகுதியில் அதிகளவான தென்னை மரங்களை யானைகள் நாசம் செய்தன.

கட்டைக்காடு, கேவில், நித்தியவெட்டை பகுதிகளில் யானைகளால் சேதமாக்கப்பட்ட தென்னைகளுக்கான இழப்பீடு அதிகாரிகளால் இதுவரை வழங்கப்படவில்லை.

குறித்த பகுதி தேசிய பூங்காவென கூறப்பட்டு இழப்பீடு தவிர்க்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம்சாட்டினர்.

தேசிய பூங்காவென அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் இருந்து மக்களை அகற்றுவதற்காகத் தான் இவ்வாறு யானைகள் திட்டமிட்டு கொண்டுவரப்பட்டு விடப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்

அண்மையில் யானைகளால் சேதமாக்கப்பட்ட இடத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன், யானைகள் விரைவில் வடமராட்சி கிழக்கில் இருந்து விரட்டி அடிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்

ஆனால், யானைகள் தொடர்ந்தும் தென்னை மரங்களை நாசம் செய்து வருவதால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதோடு அச்சமும் அடைந்துள்ளனர்.

(எ-08)

# பொலிஸ் அதிகாரி கொலை வழக்கில் சந்தேக நபருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஏப். 04

கொடிகாமத்தில் பொலிஸ் அதிகாரியை உழவியந்திரத்தால் மோதி கொலை செய்த சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த கொலை சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டபோதும் பிரதான சந்தேக நபர் தேடப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர் சட்டத்தரணி ஊடாக நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

இதனையடுத்து அடையாள அணிவகுப்பை நடத்த உத்தரவிட்ட நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த 28 ஆம் திகதி கொடிகாமம், கெற்பேலி பகுதியில், சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்ற இடத்துக்கு சென்ற கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் இரண்டு உத்தியோகஸ்தர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

(எ)

### 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான

# கொத்தல ஹிம்புட்டுவுடன் சீனப் பிரஜை சிக்கினார்!

கொழும்பு, ஏப். 04

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் சீனாவுக்கு கொத்தல ஹிம்புட்டு தாவரத்தை கடத்த முயன்ற சீனப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான 48 கிலோ கிராம் கொத்தல ஹிம்புட்டுத் தாவரத் தொகுதியை சட்டவிரோதமாக சீனாவுக்குக் கொண்டு செல்ல முயன்ற போதே நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் இலங்கைக்கு சுற்றுலா நிமித்தம் வருகை தந்த 30 வயது சீனப் பிரஜையாவார். இவர் நேற்று அதிகாலை 01:20 மணியளவில் சீனாவுக்குச் செல்லும் "சைனா ஈஸ்டர்ன்" விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் பயணிக்க வருகை தந்த போதே கைது செய்யப்பட்டார்.



இவரது பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 48 கிலோ 600 கிராம் எடையுடைய கொத்தல ஹிம்புட்டு துண்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

இலங்கையின் வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், கொத்தல ஹிம்புட்டு ஒரு பாதுகாக்கப்பட்ட தாவர இனமாகும். இதனை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த சுங்க அதிகாரிகள், குறித்த தாவரத் தொகுதியை அரசுடைமையாக்கியதுடன், கைதான சீனப் பிரஜைக்கு 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 04 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 21
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு உதவுவீர்கள்.

**இடபம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**விருட்சிகம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும்.

**தனுசு**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**மகரம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப் ஆக போய் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 512 பேர் கைது

கொழும்பு, ஏப். 04

நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 512 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 29,033 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில், 10 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 222 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 136 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 115 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 110 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,498 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

"போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி"

# இந்தியாவிலிருந்து வருகைதந்த குழுவினருக்கு யாழில் வரவேற்பு



யாழ்ப்பாணம், ஏப். 04

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தும் நோக்கிலும், இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த "Team Bison" அணியினரின் விசேட துவிச்சக்கரவண்டிப் பயணம் (Sail & Ride - Tour of Jaffna) யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகிறது.

"போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்" மற்றும் "ஆரோக்கியத்துக்காகத் துவிச்சக்கரவண்டி" ஆகிய தொனிப்பொருள்களை முன்னிறுத்தி இந்தப் பயணம் முன்னெடுக்கப்படுகிறது.

துவிச்சக்கரவண்டிப் பயன்பாட்டை அதிகரிப்பதன் ஊடாக மக்களின் தேக ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பயணத்தில், உள்ளூர் துவிச்சக்கர வண்டிப் பயண அணியினரும் இணைந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்நாட்டிலிருந்து துவிச்சக்கர வண்டி அணி ஒன்று வியாழக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் குழுவினரை பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிறீபவானந்தராஜா, க. இளங்குமரன் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர். (எ)

# விவசாயிகளுக்கு தடையின்றி உரம் வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி அநுர பணிப்புரை

கொழும்பு, ஏப். 04

உர இறக்குமதியில் நிலவும் தடைகளை கருத்தில்கொண்டு எடுக்கக்கூடிய மாற்று நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலுக்கு மத்தியிலும், விவசாயிகளுக்கு தடையின்றி உரங்கள் வழங்குவதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாகும் என்று அவர் கூறினார்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அந்த அமைச்சின் அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தற்போதைய உரக் கையிருப்பு மற்றும் விநியோகப் பொறிமுறை குறித்து இங்கு கவனம் செலுத்திய ஜனாதிபதி, மாவட்ட ரீதியாக விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கும் பணிகளை முறையான முகாமைத்துவத்துடன் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறான நெருக்கடி நிலைகளின் போது, சில வர்த்தகர்கள் உரங்களை மறைத்து வைப்பதையும், அதிக விலைக்கு விற்பனை செய்வதையும் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (எ)

## சுகாதார பரிசோதகர்கள் திடீரென பரிசோதனை



யாழ்ப்பாணம், ஏப். 04

வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தவிசாளர் தி. பிரகாஷின் அறிவுறுத்தலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவும் நேற்றுக்காலையும் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றாத பேக்கரி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் நடமாடும் நான்கு வாகனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களிலும் திடீர் பரிசோதனை நடவடிக்கை தொடரும் என்று தவிசாளர் தெரிவித்தார். (எ-03)

# சிறுமிக்கு பாலியல் தொல்லை பிக்குவுக்கு மறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 04

நாவற்குழி விகாரையில் தண்ணீர் எடுக்கச் சென்ற சிறுமி ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என்று குற்றம்சாட்டப்பட்ட பிக்குவை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாவற்குழி விகாரைக்கு அருகில் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர், அண்மையில் வீட்டுப் பாவனைக்காக விகாரைக்குக் குடிதண்ணீர் எடுக்கச் சென்றுள்ளார். இதன்போது, அங்கு நின்ற பிக்கு ஒருவர் அச்சிறுமிக்குப் பாலியல் வன்கொடுமை புரியும் நோக்கில் அநாகரிகமாக நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோது சந்தேக நபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பயங்கரவாத தடைச்சட்டத்தை விட பாரதூரமான சட்டவரைவு சமர்ப்பிப்பு

## அநுர அரசு மீது விஜயதாஸ கடும் சாடல்

கொழும்பு, ஏப். 04

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக முன்வைத்த சட்டமூலத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் தான் நீதிமன்றம் சென்றார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக குறிப்பிட்டவர்கள், அந்த சட்டத்தை காட்டிலும் பாரதூரமான சட்டவரைவையே சமர்ப்பித்துள்ளனர் என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.



கொழும்பு- பொரளை என். எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்ற நிலைப்பாடு 2015 ஆம் ஆண்டு உறுதியாக காணப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் இடம்பெறும் வரை நாங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி எவரையும் கைது செய்யவில்லை என்றும் விஜயதாஸ கூறினார். (எ)

# மட்டக்குளி கொலை குறித்து 9 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஏப். 04

மட்டக்குளி - கெமுனுபுர பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 31 ஆம் திகதி மட்டக்குளி - கெமுனுபுர பகுதியில் ஆயுதம் ஒன்றினால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இருதரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து குறித்த நபரின் வீட்டுக்கு சென்ற சிலர் கூரிய ஆயுதத்தால் தாக்கினர்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மட்டக்குளி பகுதியை சேர்ந்த 40 வயது நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மட்டக்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் 9 சந்தேகநபர்களை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைதானவர்கள் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 19 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு நோயாளிகள் கடும் அவதி

கொழும்பு, ஏப். 04

மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இந்த நெருக்கடிக்கு சுகாதார அமைச்சின் முறையற்ற நிர்வாகமே பிரதான காரணம். அரசாங்கம் தனது கட்சிக்கு ஆதரவான மருத்துவர்களை தொழிற்சங்கங்களுக்குள் புகுத்தி, சுகாதாரத்துறையைத் தனது முழுமையான அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது என்று மருத்துவம் மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் சமல் சஜீவ குற்றம் சாட்டியுள்ளார்.

மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# பாதாள குழு உறுப்பினர்களிடம் 109 துப்பாக்கி ரவைகள் பறிமுதல்

கொழும்பு, ஏப். 04

பாரியளவான போதைப்பொருள் கடத்தல்காரரும், பாதாள உலகக்குழு உறுப்பினர் என்று அறியப்படும் கரந்தெனிய சுத்தாவின் எதிரித் தரப்பு முக்கியஸ்தர் ஒருவரைப் படுகொலை செய்யத் திட்டமிட்டிருந்த 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது தெரியவந்த தகவலுக்கமைய நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த 109 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கரந்தெனிய சுத்தாவின், சகோதரரான ராஜு எனும் சனத் டி சில்வா என்பவருக்கு சொந்தமான மீட்டியாகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த போதே குறித்த 4 சந்தேகநபர்களும் எல்பிட்டிய பொலிஸ் விசேட அதிரடிப் படை பிரிவினரால் கடந்த 30 ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கையை தொடர்ந்து சந்தேகநபர்கள், "கரந்தெனிய சுத்தா"வின் எதிரித் தரப்பு குழுவின் முக்கிய உறுப்பினரை கொலை செய்வதற்காக நீண்டகாலமாகத் திட்டமிட்டிருந்தமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த நபர்கள் மனிதப் படுகொலை சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கைதான சந்தேகநபர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, மீட்டியாகொட பகுதியில் உள்ள அவரது வீட்டின் பின்புறத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள் 96 ,9 எம். எம். ரக துப்பாக்கி ரவைகள் 13 கண்டெடுக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சைலன்சர்களுக்குள் மறைத்து போதைப்பொருள் கடத்தல்!

## விமான நிலையத்தில் ஒருவர் கைது




கொழும்பு, ஏப். 04

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுமார் 25 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய "குஷ்" ரக போதைப்பொருளுடன் நபர் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் மதியம் தாய்லாந்தின் பாங்கொக் விமானம் மூலம் இந்த போதைப்பொருளை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளார்.

அவர் எடுத்து வந்த 4 பயணப் பொதிகளில் இருந்த 16 சைலன்சர்களுக்குள் மிகவும் நுணுக்கமான முறையில் இந்த போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

அந்த சைலன்சர்களுக்குள் இருந்து 25 கிலோ 500 கிராம் எடையுள்ள "குஷ்" போதைப்பொருள் மீட்கப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வர்த்தகர்களுக்கான "சிவப்பு வழி" ஊடாக இந்த போதைப்பொருள் தொகையை வெளியே கொண்டு செல்ல முயன்ற போதே சந்தேகநபர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இணையவழியில் நிதி மோசடி 147 வெளிநாட்டவர்கள் கைது!


கொழும்பு, ஏப். 04
இணைய வழியில் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 147 வெளிநாட்டு பிரஜைகளை நேற்றுக்காலை பொலிஸார் கைது செய்தனர்.
சந்தேகநபர்கள் சிலாபம் இரணவில பகுதியில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்து இந்த குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்த நிலையில் கைதாகினர்.
சீனா, பங்களாதேஷ் மற்றும் வியட்நாம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.
கைதானவர்களில் சீனாவைச் சேர்ந்த 133 பேரும், வியட்நாமை சேர்ந்த ஒருவரும், பங்களாதேஷை சேர்ந்த 13 பேரும் அடங்குவதாக பொலிஸார் கூறினர். (எ)

# மட்டக்களப்பில் கடத்தல்- கொலை! சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஏப். 04
மட்டக்களப்பில் பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து கடத்தி, நகைகளை கொள்ளையிட்ட பின்னர் அவர்களை கிணற்றில் வீசிய கொடூரச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
காஞ்சரம்குடா பகுதியைச் சேர்ந்த 26 வயது பெண், அவரது 34 வயதுடைய கணவர் மற்றும் 22 வயதுடைய சுதோகரன், ஓட்டோ சாரதி ஆகியோரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
அத்துடன் கொள்ளையிடப்பட்ட நகைகளை கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் ஏற்கனவே விளக்கமறியலில் இருந்த இரு நகைக்கடை உரிமையாளர்களும் 10ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
மயக்க மருந்து வழங்கிய குற்றச்சாட்டில் கொழும்பு - வத்தளை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நபரை, நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பொலிஸ் தடுப்புக் காவலில் 3 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் வைத்து மயக்க மருந்து கொடுத்து நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில், பாதிக்கப்பட்ட தரப்பினரைக் கொண்டு சந்தேக நபர்களை அடையாளம் காணும் அடையாள அணிவகுப்பு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டது.
மாவட்டத்தையே உலுக்கிய இந்தச் சம்பவம் குறித்து கிழக்கு மாகாண குற்றத் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
சந்தேக நபர்களிடமிருந்து ஏற்கனவே மயக்க மருந்துகள், கார், ஓட்டோ மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்டன.
மட்டக்களப்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் அரங்கேற்றப்பட்ட இந்த மனிதாபிமானமற்ற செயல்கள் குறித்து மேலதிக சாட்சியங்களை திரட்டும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (எ)

21 கோடி ரூபாய் பெறுமதியான

# போதைப்பொருளுடன் கனேடிய பிரஜை கைது



கொழும்பு, ஏப். 04
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சுமார் 21 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய குஷ் ரக போதைப்பொருளை கடத்திச் செல்ல முயன்ற வெளிநாட்டுப் பயணி ஒருவரை, நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்டவர் 42 வயதுடைய கனடா நாட்டுப் பிரஜை எனவும், அவர் ஒரு கட்டட ஒப்பந்ததாரர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து போதைப்பொருளை கொள்வனவு செய்து, பின்னர் ஹொங்கொங் ஊடாக "கதே பசிபிக்" விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் நேற்று அதிகாலை 12:30 மணியளவில் கட்டுநாயக்கவை வந்தடைந்துள்ளார்.
அவர் கொண்டு வந்த இரண்டு பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 21 கிலோ 779 கிராம் எடையுடைய குஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.
இதன் சந்தை பெறுமதி சுமார் 21 கோடியே 77 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# கிழக்கு மாகாணத்தில் கடும் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 04
நாட்டின் பல பகுதிகளில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு சாதகமான வளிமண்டல நிலைமை காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 2:00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.
மேற்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
கிழக்கு மாகாணத்திலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காலை வேளையிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.
மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை நிலவக்கூடும்.
இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# 2,045 லீற்றர் டீசல் பறிமுதல்! இருவர் பொலிஸாரால் கைது

திருகோணமலை, ஏப். 04
தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பெருமளவிலான டீசலை வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
தம்பலகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, வியாழக்கிழமை மாலை மொல்லிப்பொத்தானை பகுதியில் இரண்டு வெவ்வேறு இடங்களில் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.
இதன்போது, அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 1,430 லீற்றர் டீசல் மற்றும் 615 லீற்றர் டீசல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. மொத்தமாக 2,045 லீற்றர் டீசல் இதன் போது கைப்பற்றப்பட்டன.
இந்தச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை மற்றும் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த 41 மற்றும் 61 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் தம்பலகாமம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# சிறீ வழிபாட்டு பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம்

வீரமுனை, ஏப். 04
அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை கிராமத்தில் புனரமைக்கப்பட்ட சுயம்புலிங்க சிறீ வழிபாட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 9ஆம் திகதி தொடங்கி 12ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது.
09 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 06.00 மணிக்கு கணபதி ஹோமம் மற்றும் கர்மாரம்பம் நடைபெறவுள்ளது.
மறுநாள் வெள்ளிக்கிழமை மற்றும் 11 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.
மகா கும்பாபிஷேக நிகழ்வு 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 08.00 மணி முதல் 10. 00 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. (எ-09)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை மார்ச் மாதம் கணிசமாக வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 04
2026 மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.
கடந்த மார்ச் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஓர் இலட்சத்து 83,979 ஆகும்.
இது கடந்த ஆண்டின் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 19.7 சதவீத வீழ்ச்சி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
புதிய தரவுகளின்படி, மார்ச் மாதத்தில் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.
இந்தியாவில் இருந்து மாத்திரம் 47,533 பேர் இலங்கை வந்துள்ளனர்.
அத்துடன் மார்ச் மாதத்தில் பிரித்தானியாவில் இருந்து 18,092 பேரும், ரஷ்யாவிலிருந்து 15,685 பேரும், ஜேர்மனியிலிருந்து 13,429 பேரும், சீனாவிலிருந்து 14,064 பேரும் மற்றும் பிரான்சிலிருந்து 8,359 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.
இதற்கமைய, 2026 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 7 இலட்சத்து 40,634 ஆகப் பதிவாகியுள்ளது. (எ)

# இராணுவ முகாம் அகற்றப்பட்டது! ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 04
மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுபற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலையடி வட்டை கிராமத்தில் பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியில் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக இராணுவம் கையகப்படுத்தி முகாமிட்டிருந்த காணி விடுவிக்கப்பட்டுள்ளது.
குறித்த காணியை நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அப்பகுதி கிராம மக்கள் எனப் பலரும் சென்று பார்வையிட்டனர்.
இந்த இராணுவ முகாம் குறித்து தொடர்ச்சியாக பாராளுமன்ற அமர்வுகளிலும், பாதுகாப்பு அமைச்சின் விசேட கூட்டங்களிலும் சாணக்கியன் எம். பி. முயற்சியை மேற்கொண்டிருந்தார். இந்தக் காணி இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்டதற்கு, பாதுகாப்பு அமைச்சுக்கும், ஜனாதிபதிக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றோம் என்று போரதீவுபற்று பிரதேச சபை தவிசாளர் வி. மதிமேனன் தெரிவித்தார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மத்திய கிழக்கு...

வாழ்க்கைச்செலவு மேலும் அதிகரிக்கும் என்றும், ஏற்கனவே இலகுவில் பாதிக்கப்படக்கூடிய நலிவுற்ற நிலையில் உள்ள மக்கள் மத்தியில் இந்த அழுத்தங்கள் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் தெற்காசிய ஆய்வுகள் நிலைய ஆய்வாளர் ரஜினி கமகே தெரிவித்துள்ளார். (அ)

## மக்கள் தேவைகளை...

முன்னிலையில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் உரத் தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் கூறினாலும், யதார்த்தத்தில் உரத்திற்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் உரக் கறுப்புச் சந்தை வியாபாரம் செழித்து வளர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதியாளர்கள் மற்றும் அரசாங்கத்தைச் சுற்றியுள்ள செல்வந்த வர்த்தகர்களின் கைகளுக்கே பணம் செல்கிறதே தவிர, சாதாரண மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போதைய வறட்சியான காலப்பகுதியில் குடிநீர், விவசாய நீர் மற்றும் மின்சார உற்பத்திக்குத் தேவையான நீரைச் சரியாக முகாமைத்துவம் செய்ய அரசாங்கம் தவறிவிட்டது.

நிலக்கரி ஊழலால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டவே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. தரம் குறைந்த நிலக்கரியைத் தொடர்ந்து இறக்குமதி செய்வதால் மின் உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்து, எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படும் அபாயம் உள்ளதாக அவர் எச்சரித்தார்.

ஹோர்முஸ் நீரிணை அல்லது பாப்-எல்-மண்டேப் நீரிணைகள் மூடப்பட்டால் ஏற்படப்போகும் பாதிப்புகள் குறித்து தாம் முன்கூட்டியே எச்சரித்தும், ரஷ்யாவிடம் எரிபொருள் பெறுமாறு கோரியும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் எரிபொருள் மீதான வரிகளைக் குறைத்துள்ளது போல, இலங்கையிலும் வரிகளைக் குறைத்து மக்களுக்குச் சலுகை வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

அரசாங்கம் சமூக ஊடகங்கள் வாயிலாகப் போலிப் புகழைத் தேடுவதை நிறுத்திவிட்டு, பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட 220 இலட்சம் மக்களுக்கும் ஒரு விசேட பொருளாதார நிவாரணப் பொதியை வழங்க வேண்டும். தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதியை நிறுத்தி, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்.

எரிபொருள் விலையைக் குறைத்து மக்களின் வாழ்வாதார சுமையைத் தளர்த்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## நாட்டில் பல...

தெரிவித்துள்ளார்

பாடசாலைகளில் நிலவும் நீர் பிரச்னை குறித்ததும் முறையற்ற ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சில பாடசாலைகளில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. குறிப்பாக, கொட்டாவ தர்மபால வித்தியாலயத்தில் 4,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். இவ்வளவு மாணவர்கள் இருக்கும் அந்தப் பாடசாலைளில் கடந்த மூன்று நாட்களாகத் தண்ணீர் இல்லை.

அப்படியென்றால், அந்தப் பாடசாலையை எவ்வாறு நடத்துவது? இன்று வரை அதற்குத் தேவையான தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இதனால் மாணவர்கள் வீட்டிலிருந்தே தண்ணீரைக் கொண்டு வரும்படி சொல்லப்படுகிறார்கள். குடிப்பதற்கு மட்டுமே தண்ணீரைக் கொண்டு வர முடிகிறது. ஆனால், மாணவர்களின் மற்ற தேவைகளுக்குத் தண்ணீர் இல்லை.

கடந்த மூன்று நாட்களாக இந்த நிலைமை நீடிக்கிறது. குறைந்தபட்சம், தண்ணீர் இல்லாத பாடசாலைகளுக்கு பவுசர்கள் மூலமாவது தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் அப்படி எதுவும் செய்யாமல், நிலைமையை அப்படியே விட்டுவிட்டார்கள்.

மாணவர்கள் மீது அக்கறை இருப்பதாகப் பேசுகிறார்கள், சுற்றறிக்கைகளை வெளியிடுகிறார்கள், இந்த வறட்சியான காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுரைகளை வழங்குகிறார்கள். ஆனால், அடிப்படைத் தேவையான தண்ணீரை வழங்க அரசாங்கம் முன்வரவில்லை. அடுத்த வாரம் பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பாவது, இந்த நிலைமையை ஆராய்ந்து ஒரு முறையான திட்டத்தை உருவாக்க வேண்டும். இல்லையெனில் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாவார்கள்.

எனவே, இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தி, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். தற்போது ஆசிரியர்களின் இடமாற்றத்திலும் ஒரு பாரிய சிக்கல் எழுந்துள்ளது. குறிப்பாக வட மாகாணத்தில், மாகாண கல்வி அமைச்சு எவ்வித இடமாற்ற சபையையும் கூட்டாமல் 193 ஆசிரியர்களை இடமாற்றம் செய்துள்ளது. தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை (2007/20) படி, இடமாற்ற சபையை அமைத்தே இவ்வாறான முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால் எவ்வித சபையுமின்றி, ஆளுநரின் தேவைக்காக மட்டும் இந்த 193 பேரும் மாற்றப்பட்டுள்ளனர். குறைந்தபட்சம் இந்த ஆசிரியர்களுக்கு மேன்முறையீடு செய்யக்கூட கால அவகாசம் வழங்கப்படவில்லை.

வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் ஒரே நாளில் இந்த கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் வாகனங்களிலேயே சென்று ஆசிரியர்களுக்கு இந்த கடிதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு இதைப் பற்றி யோசிக்கக்கூட நேரம் கொடுக்கப்படவில்லை. இடமாற்ற சபை இருக்கும்போது இவ்வாறு தன்னிச்சையாகச் செயல்படுவது முற்றிலும் தவறானது.

396 தேசிய பாடசாலைகளிலும் ஆசிரியர் இடமாற்றங்கள் இடமாற்ற சபைகள் மூலமே நடைபெற்றன. ஆனால் தற்போது அந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. காரணம், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களை விடுவிப்பதில்லை. இடமாற்றக் கடிதங்கள் கிடைத்தும், ஆசிரியர்கள் பற்றாக்குறையைக் காரணம் காட்டி அதிபர்கள் அவர்களை அனுப்ப மறுக்கிறார்கள். இதனால் இடமாற்றம் கோரிய ஆசிரியர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இந்த சட்டவிரோத இடமாற்றங்கள் குறித்து நாம் ஏற்கனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். தேசிய இடமாற்றக் கொள்கையை மீறிச் செயல்படுவது கண்டிக்கத்தக்கது. கல்வி அமைச்சு உடனடியாக இதில் தலையிட்டு இந்த அநீதியான இடமாற்றங்களைச் சரிசெய்ய வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்-என்றார். (அ)

## மத்திய கிழக்கு போர்...

128.5 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

இது கடந்த டிசெம்பர் மாதத்திற்குப் பின்னரான மிக உயர்ந்த அளவாகும்.

அதேவேளை, 2025ஆம் ஆண்டுக்கான உலகளாவிய தானிய உற்பத்தி முந்தைய ஆண்டை விட சுமார் 6 சதவீதம் அதிகரித்து, சாதனை அளவாக 3.036 பில்லியன் மெற்றிக் தொன்களாக இருக்கும் என உணவு விவசாய அமைப்பு கணித்துள்ளது.

சர்வதேச அளவில் வர்த்தகம் செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் கண்காணிக்கும் இந்த சுட்டெண்ணின் உயர்வு, சாமானிய மக்களைப் பாதிக்கும் என அஞ்சப்படுகிறது.

குறிப்பாக யுக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் நிலவும் போர்ச் சூழல்கள் உலக உணவு விநியோகச் சங்கிலிக்குத் தொடர்ச்சியான அழுத்தத்தை அளித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகள் மீண்டும் மீண்டும் எச்சரித்துள்ளன.

இந்த விலை உயர்வினால் வளர்ந்து வரும் நாடுகளின் உணவுப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## புலிகளுக்கே...

கூறியதாவது-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி தொடர்பில் உதய கம்மன்பில வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம். எனினும், தற்போதைய ஆளுங்கட்சியினர் விசாரணைகளைத் திட்டமிட்டபடி வேறு திசைக்குக் கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர். அதிகாரத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்தல் விடுத்து, பலவந்தமாக வாக்குமூலங்களைப் பெறும் சூழல் இன்று காணப்படுகின்றது.

முறையற்ற விதத்தில் சாட்சியங்களைத் திரட்டுவதன் மூலம் நாட்டின் புலனாய்வுப் பிரிவைப் பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. எமது புலனாய்வுப் பிரிவினர் நாட்டுக்காக முன்னின்று செயற்பட்டவர்கள். அவர்கள் யுத்த காலத்தில் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டவர்கள். எனவே, தற்போதைய ஆட்சியாளர்களின் மிரட்டல்களுக்கு அவர்கள் பணியப்போவதில்லை.

புலனாய்வுப் பிரிவினரைப் பழிவாங்கும் படலத்தை அரசு நிறுத்த வேண்டும். எதிர்காலத்தில் எமது ஆட்சி அமையும் போது, பாதிக்கப்பட்ட அனைத்துப் புலனாய்வு அதிகாரிகளுக்கும் நாம் நிச்சயம் நீதியைப் பெற்றுக்கொடுப்போம் - என்றார். (அ)

## கடும் வெப்பம்...

அளவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி ஒருவரின் மனநலத்தைப் பாதிக்கின்றது.

மூளையில் உள்ள இரசாயனங்கள் மற்றும் ஹோர்மோன்களின் தாக்கம் காரணமாக ஒருவரது மனநிலை வீழ்ச்சியடையக்கூடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இரவு நேரங்களில் நிலவும் அதிகவெப்பம் தூக்கத்தைச் சீர்குலைப்பதோடு, இது மேலும் மன அழுத்தத்திற்கு வழிவகுக்கின்றது.

கடும் வெப்பமானது கவனக்குறைவு மற்றும் நினைவாற்றல் குறைபாடு போன்ற நிலைகளுக்கும் இட்டுச் செல்லக் கூடும் எனவும் எச்சரித்துள்ளார்.

கடும் வெப்பத்தினால் நாட்பட்ட நோயாளிகள், சிறுவர்கள் மற்றும் முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் அதிக ஆபத்தை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் வெப்பமான காலநிலையில் மது அருந்துவது மன உறுதியற்ற தன்மையை அதிகரிப்பதுடன், மன அழுத்தத்தையும் உண்டாக்கும் என்பதால் அதனைத் தவிர்க்க வேண்டும்.

மன நலத்தைப் பேண தியானம் செய்தல், இசை கேட்டல் மற்றும் சூழலோடு இணைந்த செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

மனதை ஆரோக்கியமாக வைத்திருக்க இலகுவான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## அடுத்த வாரம்...

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பொன்னி சம்பா, பால் பொன்னி மற்றும் ஜி. ஆர் 11 என்று அழைக்கப்படும் அரிசி வகைகளை இறக்குமதி செய்வதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக ஆயிரத்து 40 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை கடந்த வாரத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையில், இறக்குமதிக்கான அனுமதி குறித்து அத்தியாவசிய உணவுப்பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கணேஷ் விநாயகசுந்தரம் தெரிவிக்கையில்-

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை வரம்பை விதிக்க வேண்டாம் என வர்த்தக அமைச்சிடம் கோரியுள்ளோம்-என்றார். (அ)

## டீசல் விலை...

இதனால் போக்குவரத்து மற்றும் மின்சாரக் கட்டணங்கள் உயர்ந்து, பணவீக்கம் 7 வீதம் வரை அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடு, மக்களின் நுகர்வுத் திறனைக் குறைத்து பொருளாதாரச் சுருக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் வெளிநாட்டு வருமானத்தில் 70 வீதம் மத்திய கிழக்கில் வாழும் 10 இலட்சம் தொழிலாளர்கள் மூலமே கிடைக்கின்றன.

இந்த நிலையில், போர்ச் சூழலால் அங்குள்ள தொழிலாளர்களின் வேலைநாட்கள் குறைக்கப்பட்டுள்ளதால், இலங்கைக்குக் கிடைக்கும் வருமானம் பெருமளவு வீழ்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, போக்குவரத்துப் பாதிப்பால் உணவுப் பொருட்களின் விலைகள் உயரும் அபாயம் உள்ளது.

குறிப்பாக, மருந்து உற்பத்திக்கான மூலப்பொருட்கள் தட்டுப்பாட்டினால் மருந்துப் பொருட்களின் விலைகள் 50 வீதம் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 35 வீதமானோர் வளைகுடா பிராந்தியங்கள் வழியாகவே வருகை தருகின்றனர்.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சுற்றுலாத்துறை வருமானம் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் மாதங்களிலும் அதன் தாக்கம் மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த நெருக்கடியான சூழலில், பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்க "அஸ்வெசும" போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வலுப்படுத்துவதே சிறந்த வழியாக இருக்கும் என்றும் அட்வொகாட்டா நிறுவனத்தின் தலைவர் முர்டசா ஜெபர்ஜி தெரிவித்துள்ளார். (அ)

## முதலீட்டாளர்...

தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் காலங்களில், முதலீட்டாளர்கள் என்ற அடிப்படையிலோ, ஏற்றுமதியளார்கள் என்ற போர்வையிலோ, எங்களுடைய வளங்களும் எங்களுடைய வருமானங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற சூழல் உருவாகக்கூடாது என்பதே எம்முடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எமது கட்சியின் இந்த நிலைப்பாட்டை பிரதேசவாதமாகவோ இனவாதமாகவோ, தேசியவாதமாகவோ யாரும் கருதக் கூடாது. கடந்த பல தசாப்தங்களாக அழிவுகளையும் அவலங்களையும் சுமந்து, ஏனையவர்களோடு ஒப்பிடுகின்ற போது பின்தள்ளி இருக்கின்ற எமது மக்களின் எதிர்காலம் சுபீட்சமடைய வேண்டும்.

அதற்கு எமது பிரதேசங்கிளில் இருக்கின்ற வளங்களை உச்சபட்சம் நாங்களே பயன்படுத்த வேண்டும் என்ற அக்கறையின் வெளிப்பாடாகவே அனைவரும் அணுக வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

கடலட்டை பண்ணைகளை மேலும் விஸ்தரிப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த சில தினங்களுக்கு முன்னர், கடற்றொழில் அமைச்சர் மற்றும் வடக்கு ஆளுநர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

எமது பிரதேசத்திற்கு அந்நிய செலாணியை பெற்றுக் கொள்ளும் வகையில் எமது செயலாளர் நாயகத்தின் தீர்க்க தரிசனத்துடன், விஷ்தரிக்கப்பட்ட கடலட்டை உற்பத்தி பாரிய வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையிலேயே, தற்போயை அரசாங்கமும் இந்த விடயத்தில் அவதானம் செலுத்தியுள்ளது.

இவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோது, பல்வேறு பரிமாணங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இல்லாதுவிடின், எமது மக்களுக்கு சிக்கலை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது.

குறிப்பாக முதலீட்டாளர்கள் என்ற அடிப்படையில், தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் போன்ற வெளியார் உள்வாங்கப்பட்டால், வருமானத்தின் பெரும் பகுதி எடுத்துச் செல்லப்பட்டு விடும் எமது மக்களுக்கு போதிய பலன் கிடைக்காது. அதேபோன்று, பூகோள அரசியல் ஆதிக்கத்திற்கும் பயன்படுத்தக் கூடிய அபாயம் இருகிக்கின்றது.

எனவே, தற்போயை முயற்சிகளிலும் இந்தப் பிரதேசத்தினை சேர்ந்தவர்களே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்-என்றார். (அ)

## அமெரிக்க...

அனைத்து இன மற்றும் மதங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வின் முதன்மை நோக்கம், போரை எதிர்ப்பதும் அமைதியைக் கோருவதுமே ஆகுமென இந்த அமைதிப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# 8 அரசு நிறுவனங்களை விற்கப் போவதில்லை!

## உயர் நீதிமன்றுக்கு அரசு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 04

சிறீலங்கா ரெலிகாம், சிறீலங்கன் எயார்லைன்ஸ், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா வைத்தியசாலை உள்ளிட்ட எட்டு அரச நிறுவனங்களை விற்பனை செய்வது தொடர்பான முந்தைய நிர்வாகத்தின் முடிவை தற்போதைய அரசாங்கம் செயல்படுத்தாது என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட விற்பனையை எதிர்த்து கலாநிதி குணதாச அமரசேகர மற்றும் பிறர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு மீதான விசாரணையின்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

நீதிபதிகள் அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன மற்றும் சம்பத் அபேய்கூன் ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன்பாக இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டவர்களில், முந்தைய அரசாங்கத்தின் அமைச்சரவையும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அடங்குவர்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரசு சட்டத்தரணி, தற்போதைய அரசாங்கம் நிறுவனங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையைத் தொடர வேண்டாம் என முடிவு செய்துள்ளதாகவும், மறுசீரமைப்பு முயற்சிகளை மேற்பார்வையிடுவதற்காக மட்டுமே ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுனிஷ்க விதாரண, அரசாங்கம் விற்பனை நடவடிக்கையைத் தொடரப் போவதில்லை என உறுதி செய்துள்ளதால், இந்த மனுவைத் தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்.

இரு தரப்பினரின் வாதங்களையும் பரிசீலித்த பின்னர், உயர் நீதிமன்ற அமர்வு மனு மீதான விசாரணையை நிறைவு செய்தது. (அ)

# ரஷ்யாவுடன் வர்த்தகத்தை விரிவுபடுத்த நடவடிக்கை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, ஏப். 04

ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகருடனான வர்த்தகத்தை, தற்போதுள்ள விமான மற்றும் கடல்வழிப் பாதைகளைப் பயன்படுத்தி இலங்கை விரிவுபடுத்த முடியும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியப் பெருங்கடலின் முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் இலங்கையின் அமைவிடம் மற்றும் ஏற்கனவே உள்ள விமான தொடர்பு ஆகியவை ரஷ்யாவுடனான வேகமான வர்த்தக இணைப்புகளுக்குப் பக்கபலமாக இருக்கும்.

விமானப் போக்குவரத்து மூலம் சரக்கு நடவடிக்கைகளை அடுத்த சில மாதங்களிலேயே உடனடியாகத் தொடங்க முடியும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை ஒரு பிராந்திய தளபாடமையமாக பயன்படுத்தி யூரேசிய போக்குவரத்து கட்டமைப்பின் கீழ் கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்த முடியும்.

குறிப்பாக, சீனா, ஜப்பான் மற்றும் கொரியாவுடனான கடல் வழிப் பாதைகளுக்கு மிக அருகில் விளாடிவோஸ்டாக் அமைந்துள்ளமை இலங்கைக்குச் சாதகமான அம்சமாகும்.

அம்பாந்தோட்டை ஏற்கனவே தெற்காசியாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கு வாகனங்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக உருவெடுத்துள்ள நிலையில், இந்த உள்கட்டமைப்புகளை ரஷ்யாவுடனான வர்த்தகத்திற்கும் பயன்படுத்த முடியும் - என்றார். (அ)

# விரிவுரையாளர் கொலை வழக்கு: சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கொலை வழக்கில் கைதான் இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கொலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவரது சடலம் தனங்கிளப்பு பகுதியில் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் விரிவுரையாளரின் மருமகன் மற்றும் மகள் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டதுடன் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.

இருதரப்பு சட்டத்தரணிகளின் நீண்ட வாதப்பிரதிவாதங்களை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் இரண்டாம் சந்தேகநபரான விரிவுரையாளரின் மகள் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிப்பதற்கான மனநிலையில் உள்ளாரா? என்பதை உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சட்ட வைத்திய அதிகாரிக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த விடயத்தில் ஊடகங்களின் செய்தி அறிக்கையிடல் பொறுப்பு வாய்ந்ததாக அமைய வேண்டும் எனவும் நீதிவான் அறிவுறுத்தியுள்ளார். (எ)

# பிள்ளையானின் விளக்கமறியல் உத்தரவை நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்த தீர்மானம்

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஏப். 04



பிள்ளையானை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க கல்கிசை நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த உள்ளதாக பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலை புலிகள் அமைப்பால் நடத்திச்சென்ற சித்திரவதை முகாம்களை பிள்ளையான் கணக்கில் சேர்ப்பதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பிள்ளையானை கைது செய்து விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் குறிப்பிட்ட விடயம் பொய் என்பது ஒரு வருடத்துக்கு பின்னர் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருவருடகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதிலும், அவர் மீது உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாறாக, பிள்ளையான் விடுதலை புலிகளுக்கு எதிராக செயற்பட்டமை மற்றும் இராணுவத்தில் இணையாமல் அவர் ஆயுதமேந்தி விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்டமை சட்டவிரோதமானது என்றே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு விடயங்களை முன்வைத்துள்ளனர்.

அதேபோல் அவர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை கடத்தி காணாமலாக்கிய சம்பவம் தொடர்பான விடயங்களும் நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது.

எனவே, பிள்ளையான் சார்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளை கோரும் வரையில் பிள்ளையானை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ)

# வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கபடவுள்ள உலக வங்கியின் திட்டங்களுக்கு அனுமதி



கொழும்பு, ஏப். 04

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள “ரிவைவ்” திட்டத்தின் கீழ், வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக முன்மொழியப்பட்ட இரண்டு பிரதான செயற்றிட்டங்களுக்கு உத்தியோகபூர்வ அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக உலக வங்கிப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று காலை ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய உலக வங்கிப் பிரதிநிதிகள் குழுவினர் இந்தத் தகவலை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தினர்.

இந்த முதற்கட்டத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்தில் உள்ள குருநகர் இறங்குதுறை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணக் கோட்டை ஆகிய இரு இடங்களையும் மையப்படுத்திய ஒருங்கிணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கே உலக வங்கியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த இரு இடங்களையும் உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு, துறைசார் அதிகாரிகளுடன் இணைந்து நேற்று நேரில் சென்று பார்வையிட்டு, கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இன்றைய கலந்துரையாடலின்போது, அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்படவுள்ளன இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான உட்கட்டமைப்பு வசதிகள் எவை, எதிர்பார்க்கப்படும் திட்ட மாதிரி வடிவங்கள் மற்றும் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வடக்கு மாகாணத்துக்குக் கிடைக்கப்பெறும் நேரடி மற்றும் மறைமுகப் பொருளாதார நன்மைகள் குறித்தும் ஆளுநருடன் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார். (அ)

# மணல் கடத்தல்காரர்கள் தப்பியோட்டம் வடமராட்சியில் நேற்று பெரும் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 04

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கள்ள மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படை யினர் கலைத்துச் சென்ற சம் பவம் பதிவாகியுள்ளது.

நேற்று முன் தினம் நள்ளிரவு குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பருத்தித் துறை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இரவு நேரங்களில் இடம் பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் விசேட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக நேற்று முன் தினம் நள்ளிரவு பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கள்ள மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தை கைப்பற்ற முனைந்த போது அவர்கள் வீதியில் மணலை கொட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காணொளி அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சமநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media